# துணிவே துணை!

வாசிக்க: 2 நாளாகமம் 32:1-8

*"மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்" (எபி 10:35)*

"அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பார்கள். தைரியத்திற்கு எதிர்ப்பதம் பயம். ஏன் நமக்கு பயம் வருகின்றது என்பதை சற்றுச் சிந்திப்போம்.

இஸ்ரவேல் தலைவர்கள் சிலரைக் கானான் நாட்டைச் சுற்றி வேவுபார்த்து வரும்படி மோசே கர்த்தரின் விருப்பப்படி அனுப்பிவைத்தார். அங்கு நன்மையான காரியங்கள் பல காணப்பட்டாலும் அங்கே குடியிருக்கும் அரக்கர் போன்ற மனிதர்களைக் கண்டு ஒரு சிலர் பயந்தார்கள். அவர்களின் பயத்திற்குக் காரணம் அல்லது தைரியமின்மைக்கு காரணம் அந்த ராட்சதர்கள் அல்ல; மாறாக, கடவுள் மீது அவர்களுக்கு இருந்த நம்பிக்கையின்மையும் அவிசுவாசமுமே (எண் 13:33). சில வேளைகளில் உடல் பலத்தை நம்புவதும், நாம் பெற்ற அபிஷேகத்தை இழந்து போவதும்கூட தைரியமின்மையையும், பயத்தையும் கொண்டுவருகிறது (1 சாமு 16:14; 17:24; சங் 78:9). மேலும் அநேகருக்குப் புகழ்மீது நாட்டம் ஏற்படுவதினால், "கிடைக்காமல் போய்விடுமோ" என்ற பயம் ஏற்பட்டு, தைரியமின்றிச் செயல்படுவதைக் காணலாம் (யோ 12:42,43).

பயத்தினால் ஏற்படுவதெல்லாம் தீய விளைவுகளே! பேதுரு பயந்தபோது தனது ஆண்டவரை மறுதலிக்க மட்டுமல்ல, சபிக்கவும் செய்தான் (மாற் 14:66-72). பின்னர் ஒரு சூழலில் அவனது பயம் அவனை மாய்மாலக்காரனாக்கிற்று (கலா 2:11-13). பயம் பிறப்பிப்பது மாய்மாலம்; மாய்மாலம் பெருக்குவது பயம் (ஏசா 33:14). உபாகமம் 20:8இல் பயங்காளிகளும், திடனற்றவர்களும் தங்கள் சகோதரரின் இருதயத்தைக் கரைந்துபோகப் பண்ணுகிறார்கள் என்று பார்க்கிறோம். ஆம், கோழையான மனிதன் உடனிருப்போரையும் கலங்கப்பண்ணுகிறான். தான் பயப்படுவது மட்டுமல்ல, மற்றவர்களையும் பயத்தின் வழியில் நடத்திவிடுவான்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பயப்படுகிறவர்களுக்கு நரகமே கிடைக்கின்றது என வெளிப்படுத்துதல் 21:8 கூறுகிறது. நரகத்திற்குப் பங்காளிகள் பட்டியலில் "பயப்படுகிறவர்கள்" முதல் வரிசையில் இருக்கின்றனர்! நீதிமானோ சிங்கத்தைப் போல் தைரியமாயிருக்கிறான் (நீதி 28:1).

நாம் தைரியமாக இருக்கத் திருவசனங்களே ஆதாரமாக உள்ளன. கடவுள் நமது பக்கமாயிருக்கும்போது நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோ 8:31). "நமக்கே துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தானே" (2 நாளா 32:7,8). உலகத்திலிருக்கிறவனிலும், நமது உள்ளிலிருக்கிறவர் பெரியவர் (1 யோ 4:4). "கிறிஸ்து எனக்கு வாழ்வு; சாவு எனக்கு இலாபம்" என்பது நமது கோட்பாடாய் இருக்குமானால் பயம் பறந்துபோகும்.



*பூமி பின்வாங்குகிறது;*
*வானம் வா வா என்றழைக்கிறது;*
*இதுதான் நான் முடிசூட்டப்படும் நாள்;*
*ஆ, மரணம் எவ்வளவு இனிமையானது!*
*— சுவிசேஷகர் D.L. மூடி, 1837-1899*